## மூன்றாம் ஆண்டு – ஐந்தாம்பருவம்
## தமிழ் இலக்கிய வரலாறு – 7BTA5C3
## முதன்மைப் பாடம் - தாள் - 12

**அலகு – 1 செம்மொழியாம் தமிழ் மொழியின் சிறப்பு**

இந்தியாவில் வழங்கப்பட்டு வரும் 179 இலக்கியவளம் செறிந்த மொழிகளுள் தமிழ்மொழி தொன்மையானது

கி.மு – 4 –ம் 100-ல் தோன்றிய தொல்காப்பியத்திற்கும் முன்னர் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழ் மொழி தோன்றியது. தமிழினத்தின் சிறப்பு, வாணிகச் சிறப்பு, தமிழ் மொழியின் தொன்மைச் சிறப்பு, அனைத்து மொழிகளுக்கும் தாய் என்றும் சிறப்பிக்கப்படுகிறது.

அலகு – 2 சங்க காலம் - சங்கமருவிய காலம்

**சங்ககாலம்:**

சங்கம் என்ற சொல் வழக்கு தமிழில் தோன்றிய சொல் இல்லை எனினும் புலவர்கள் ஒன்றிகூடி ஆராய்ந்து நூல்கள் இயற்றப்பட்டவரலாறும், அவற்றினைப் பற்றிய சான்றுகளும், அலையம் என்ற சொல் வழக்கின் மூலம் அறியமுடிகிறது.

முதல் சங்கம் இழையனார் அகப்பொருள் உரையில் முதல், இடை, கடைச் சங்கங்கள் பற்றிய தகவலும் அவை இருந்த காலம் பற்றிய தகவலும் சுட்டிகாட்டுவதன் மூலம் சங்கம் இருந்ததனை அறியமுடிகிறது. முதல் சங்க இலக்கண நூல் அகத்தியம்.

**இடைச்சங்கம் - கபாடபுரம்**

இடைச்சங்க நூல் தொல்காப்பியம், என்ப, என்மனர் எனமொழி போன்ற சொற்களை கையாண்டுள்ளதால் சங்கம் என்ற ஒன்று இருந்ததனை அறியமுடிகிறது.

**கடைச்சங்கம் : மதுரை**

இதில் அகத்தியம் மாபுராணம், அகவல் போன்ற நூல்களும், அகத்தியமும், தொல்காப்பியமும் இருந்துள்ளதால் சங்கங்கள் இருந்ததனை இச்சான்றுகள் மேலும் சங்கம் இருந்ததனை வழியுறுத்தும் விதமாக அமைகிறது.

புலவர்களும் அரசர்களும், ஒன்றுகூடி தமிழ்வளர்சத்தால் சங்க காலம் பொற்காலம் என்று அழைக்கவும் காரணமாக அமைகிறது.

**சங்க மருவியகாலம்**

சங்க காலத்திற்குப்பின் தோன்றிய காலம், இக்காலத்தில் மக்கள் அறநெறீபிறழ்ந்து வழிநடந்ததால் பல அறநூல் தோன்றக் காரணமாக அமைந்தது

திருக்குறள் முதல் இக்காலத்தில் பல அறநூல்கள் தோன்றிமக்களுக்கு நல்வழிகாட்டும் விதமான அமைந்தது. ஒன்னே முக்கால் வரியால் உலகிற்கே அறிவரை செய்த முதல் மாமனிதனில் நூல் இது.

நாலடியார்: "நாலும் இரண்டும் சொல்லுக்குறிதி……

மனிதனுக்கு முக்கியம் நாக்கும் சொல்லும், நாபிறழ்க் தால் சொல் தவறினால் மறுபடியும் மாற்ற இயலாது எனவே ஒரு சொல்லை ஆராய்ந்து சொல்ல வேண்டும் என்று அற நூல்கள் அனைத்தும்.

**அலகு – 3 – i) பல்லவர்காலம், சோழர்காலம்**

பக்தி இலக்கியங்கள் தோன்றி காலமே பல்லவர்காலம் என்றழைக்கப்படுகிறது. தமிழகம் கி.பி – 6ஆம் 100-முதல் கி.பி 9-ஆம் 100 வரை பல்லவர்களாலும், பாண்டிய மன்னர்கலாலும் ஆளப்பட்டு வந்தது. சைவ, வைணவ இலக்கியங்கள் தோன்றி தமிழ்மொழியின் வளர்ச்சிக்கு பெரிதும் துணைபுரிந்தனர் - சோழர்கள் காலத்தல் காப்பியங்கள் தோன்றின. ஐம்பெருங்காப்பியங்கள், ஐஞ்சிறகாப்பியங்கள் பற்றிய செய்திகளும் இலக்கணநூல்களும். சோழர்காலத்தில் தோன்றி புகழ்பெற்றன.

**ii) சோழர் காலம்**

பல்லவர் பேரரசு நிலைகுன்றியதும் அவர்கட்குப்பட்டு சீற்றரசாக இருந்த சோழர்கள் சுயாட்சிபெற்று பெரும் சாம்ராஜ்ஜியத்தை அமைக்க விசயால சோழன் மற்றும் துதலாம் ஆதித்த சோழன் காரணமாக இருந்தனர். சோழர்கள் தஞ்சையை தலை நகரமாக் கொண்டு பல்லவ ஆளகையில் இருந்த பிறநாடுகளை தமது ஆட்சிக்குள் கொண்டு வந்தனர். பாரந்தக சோழன் பாண்டியப் பேரசினையும் இராசராச சோழன் அயல்நாடுகளையும் வென்று சோழப்பேரரசினை மிக உச்ச நிலைக்கு கொண்டு செல்லவும் காரணமாக இருந்தான், இராசராச சோழனின் மகன் தந்தையையும் மிஞ்சும் அளவிற்கு கங்கையை வென்று, கபாரத்தினை வென்று சுமத்திர (இந்தோனேசியா) வரை சாம்ராஜ்சியம் செய்த சோழப் ரேரசு மூன்றாம் இராசஇராசன் காலத்தில் வீழ்ச்சியுற்றது.

**அலகு – 4 i) நாயக்கர் காலம்**

சோழப் பேரரசிற்குப் பின் நாயக்கர் ஆட்சிக்குவந்தனர். இக்காலம் பிரபந்தகாலம் என்றும், உரையாசிரியர்கள்காலம் என்றும் அழைக்கப்பட்டது. நாயக்கர் ஆட்சி விஜயநகரப்பேரரசு என்றும், அவர்கள் தஞ்சை, மற்றும் மதுரையை தலைநகராகக் கொண்டு ஆட்சிபுரிந்தனர்.

இவர்களின் ஆட்சிக்காலத்தில் கன்னித்தமிழ் மணிப்பிரவாள நடைக்கு மாறத் தொடங்கியது, சிலேடை, பிரபந்தங்கள், புராணங்கள், தனிப்பாடல்கள் உரைகள் போன்றன நாயக்கர் காலத்தில் தோன்றியது.

**அலகு – 4 ii) ஐரோப்பியர்காலம்**

பல்லவர், சோழர், நாயக்கருக்குப்பின் மிகவும் வலிமையாக ஆட்சி செய்தவர்களில் குறிப்பிடத்தக்கவர், ஐரோப்பியர் இவர்கள் சமயத்தினைப் பரப்ப தமிழகம் வந்தாலும் தமிழுக்காக பலதொண்டுகள் செய்து இன்றைய அச்சுவடிவ நூலுக்கு அடிகோலவும் செய்தனர், வீரமாமுனிவர், ஜி.யு போப், கால்டவெல் , போன்றோரின் தமிழ்த் தொண்டுகள் தமிழர்களாலும் செய்யமுடியாத மிகப்பெரும் தொண்டாக அமைவது நம்மால் இன்றும் மறுக்க இயலாது. இவர்கள் தமிழ்தொண்டு மல்ல நாட்டின் வளர்ச்சியிலும் இவர்கள் பங்கு குறிப்பிடத்தக்கது.

**அலகு 5 : தற்காலம், பிற்சேர்க்கைப்பகுதிகள்**

தற்கால இலக்கியங்களில் குழந்தைகளுக்கு கற்பிக்கக் கூடிய கதைகள் இடம்பெறுகின்றன. சிறந்த மேற்கோள்கள், ஓவியங்கள் குறிப்பிடத்தக்கன ராமாயணக் கதையை கருவாகக் கொண்டு புதுமைப்பித்தன் படைத்த “சாபவிமோசனம்” கதை மற்றும் இராமகிருஷ்ணன் எழுதிய “கிரேக்கத்து முயல்” கதை மற்றும் கந்தர்வன் போன்றோரின் கதைகளிலிருந்து மக்களின் மரபுகளையும், மொழி வளத்தினையும் அறிய முடிகிறது. தமிழ் மொழிக் குடும்பங்கள் பற்றியும், உலகச்செம் மொழிகள், மற்றும் தமிழ் செவ்விலக்கியங்கள் பற்றியும் தெளிவாக எடுத்துரைக்கப்படுகிறது.